**கன்வில் ஹோல்டிங்ஸ் பிறைவேட் லிமிட்டட் - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

கன்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் (''கம்பனி'') மற்றும் கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் (''தொகுதி'') ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கை தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனி மற்றும் தொகுதியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள கம்பனி மற்றும் தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**விடயப்பொருளின் வலியுறுத்தல்**

எனது அபிப்பிராயத்திற்கு முனைப்பழிவு இல்லாமல், நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதில் உள்ள தொடர்ந்து இயங்குதல் எடுகோள்கள் குறித்த நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 2.5 க்கு நான் கவனத்தை ஈர்க்கிறேன். மேலே உள்ள குறிப்பில் கூறப்பட்டுள்ள படி கம்பனியின் முகாமையானது கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனிகளினுடைய தொடர்ந்து இயங்குவதற்கான திறனை மதிப்பிட்டு இருக்கிறது மற்றும் எதிர்காலத்தில் வணிகத்தில் தொடர்வதற்கான ஆதாரங்கள் தன்னிடம் இருப்பதாக திருப்தி அடைந்துள்ளது. மேலும் நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குதல் திறனைப் பற்றி குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு பொருண்மையான நிச்சயமற்ற தன்மையையும் முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. எனவே, நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்படும்.

எவ்வாறாயினும், ஹெலன்கோ ஹோட்டல் மற்றும் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் இயக்குனர் சபை 2015 ஆம் ஆண்டு ஹம்பாந்தோட்டையில் ஹோட்டலை நிர்மாணிக்கும் திட்டத்தை கைவிடுவதற்கு தீர்மானித்துள்ளது. இதன் விளைவாக, திட்டத்தினுடைய ஹோட்டல் கட்டுமான நடவடிக்கைகள் முடிவுக்கு வந்துள்ளன. எதிர்பார்க்கக்கூடிய எதிர்காலத்தில் கம்பனியைக் கலைக்க கம்பனியின் முகாமைத்துவம் முடிவு செய்திருக்கவில்லை. எனவே, கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்படும்.

மேலும், சினோலங்கா ஹோட்டல் மற்றும் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் முகாமைத்துவமானது கம்பனியின் தொடர்ந்தியங்கும் திறனைப் பற்றிய மதிப்பீட்டை மேற்க்கொண்டுள்ளதுடன் எதிர்காலத்தில் வணிகத்தை தொடர்வதற்கான வளம் தன்னிடம் இருப்பதாக திருப்தியடைந்துள்ளது. மேலும் கம்பனியின் தொடர்ந்தியங்கும் திறனைப்பற்றி குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு பொருண்மையான நிச்சயமற்ற தன்மையையும் நிர்வாகம் அறிந்திருக்கவில்லை. மேலும் 2020 ஆம் ஆண்டு யூலை 10 ஆம் திகதிய 20/1042/204/050 – I அமைச்சரவை கடிதத்தின் பிரகாரம் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. எனினும், கம்பனியின் இயக்குனர் சபை 2022 மே 30 திகதியிருந்து அமுலாக்கும் வகையில் 09 மாதகாலப்பகுதிக்காக கிறான்ட் ஹியாட் கொழும்பு செயற்திட்டத்தினைக் குறைப்பதற்கு தீர்மானித்திருந்ததுடன் அறிக்கைத்திகதி வரையிலும் நிர்மாண நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

இதற்கு மேலதிகமாக, 2023 மார்ச் 13 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் MF/018/2023/055 ஆம் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ஏனைய எஸ்ஓஈ (SOE) களுக்கிடையில் கன்வில் ஹோல்டிங்ஸ் பிறைவட்டின் முதலீட்டு திரும்பப்பெறல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. குறிப்பிடப்பட்ட செயற்பாட்டு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் விருப்பத்தினை தெரிவிக்கும் செயற்பாடு (EOI) ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல்இ தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள்இ செலவினங்கள்இ சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல்இ அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோககத்தில் அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள்இ நடைமுறைகள்இ புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பின் மீது கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 ஒழுங்கமைப்பின் தொடர்ந்து இயங்கல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கன்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் (துணைக்கம்பனி) 2015 இல் ஹம்பாந்தோட்டையில் ஹோட்டல் நிர்மாணிப்பதற்கான செயற்திட்டத்தை கைவிடுதற்கு தீர்மானித்துள்ளது. அதன் விளைவாக செயற்திட்டத்தின் ஹோட்டல் நிர்மாண செயற்பாடுகள் ஒரு முடிவிற்கு வந்துள்ளது. மேலும், 2017 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 17/1613/733/029 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கன்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டடில் (தாய் கம்பனி) பங்குதாரர்களின் ஒரு பகுதி கம்பனியின் பங்குகளினை மாற்றுவதற்கு பொது முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சானது அவர்களின் அறிவுறுத்தலை வழங்கியுள்ளது. மேலும், 2023 மார்ச் 14 ஆம் திகதிய 23/0431/604/046 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கன்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டில் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன லிமிட்டட் மற்றும் லிட்றோ கேஸ் லங்கா லிமிட்டட் ஆகியவற்றினால் பேணப்படும் பங்குகளினை உடன் அமுலுக்கு வரும் வகையில் பொது திறைசேரிக்கு மாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது அறிக்கையிடும் திகதி வரை நிறைவேற்றப்படவில்லை. | தற்போது இக்கம்பனியானது அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் மறுசீரமைப்பு அலகினால் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் முன்னுரிமை அடிப்படையில் ஏனைய கம்பனிகளுக்கிடையே முதலீட்டினை திரும்பப்பெறுவதற்கு முன்மொழிந்துள்ளது. | அமைச்சரவை தீர்மானங்களினை அமுல்படுத்தப்பட வேண்டும். |
| சினோலங்கா ஹோட்டல் மற்றும் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் (துணைக்கம்பனி) முகாமைத்துவமானது கம்பனியின் தொடர்ந்தியங்கும் திறனைப் பற்றிய மதிப்பீட்டை மேற்க்கொண்டுள்ளதுடன் எதிர்பார்க்கக்கூடிய எதிர்காலத்தில் வணிகத்தை தொடர்வதற்கான வளம் தன்னிடம் இருப்பதாக திருப்தியடைந்துள்ளது. மேலும் கம்பனியின் தொடர்ந்தியங்கும் திறனைப்பற்றி குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு பொருண்மையான நிச்சயமற்ற தன்மையையும் நிர்வாகம் அறிந்திருக்கவில்லை. மேலும் 2020 ஆம் ஆண்டு யூலை 08 ஆம் திகதிய 20/1092/204/050 – 1 | கம்பனியின் முகாமைத்துவம் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களினை பின்பற்றுவதனால் அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் மறுசீரமைப்பு அலகினால் ஆரம்பிக்கப்பட்டு முன்மொழியப்பட்ட முதலீட்டு பிரித்தெடுப்பு நிகழ்ச்சித்திட்டத்தை தற்போது செயற்படுத்தி | - மேற்படி - |

| | |
|---|---|
| அமைச்சரவை கடிதத்தின் பிரகாரம் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள போதிலும் கம்பனியின் இயக்குனர் சபை 2022 மே 30 இலிருந்து அமுலாக்கும் வகையில் 09 மாதகாலப்பகுதிக்காக கிறான்ட் கியாட் கொழும்பு செயற்திட்டத்தினைக் குறைப்பதற்கு தீர்மானித்திருந்ததுடன் அறிக்கைத்திகதி வரையிலும் நிர்மாண நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | வருகின்றது. |

## 1.6. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 52 (3) ஆம் பிரிவு | பிரதிபலனை கருத்திற்கொள்ளாமல் ஒவ்வொரு பங்கும் ரூபா 8.50 படி 235,294,117 பங்குகள் வழங்கப்பட்டு பங்கின் வெளியீடானது கம்பனிகள் பதிவாளரிடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனினும், அதற்கேற்ப நிதிக்கூற்றுக்கள் சீராக்கப்படவில்லை. எனவே நிதிக்கூற்றுக்கள் மற்றும் கம்பனிகள் பதிவாளரிடம் உள்ள பதிவுகள் என்பவற்றில் பங்கு மூலதனமாக காட்டப்பட்டுள்ள தொகை வேறுபாடு ரூபா 2 பில்லியன் அவதானிக்கப்பட்டது. | கம்பனிகள் பதிவாளரிடம் உள்ள கன்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவட்) லிமிடட்டின் கூறப்பட்ட மூலதனத்தின் இப்பங்கு வழங்கல் புதுப்பித்தல் பதிவுகளினை ரத்து செய்வதற்காக பங்கு மீள் கொள்வனவு செயற்பாட்டினை ஆரம்பிக்கும் செயன்முறையில் கம்பனி உள்ளது. | கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் பிரிவுகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா. 3,814,462 தொகை இலாபமாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டமாக ரூபா. 4,299,299 தொகை காணப்பட்டது. ஆகையால் நிதி விளைவில் ரூபா 8,113,761 மில்லியன் தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. சினோலங்கா ஹோட்டல் மற்றும் ஸ்பா (பிறைவட்) லிமிட்டட்டின் வெளிநாட்டு நாணய பரிமாற்று இலாபமே முன்னேற்றத்திற்கான காரணமாகும்.

## 2.2 பிரதான வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான வருமானம், நிர்வாக செலவினங்கள் மற்றும் தேறிய இலாபம் / (நட்டம்) என்பன பின்வருமாறு.

| **வருடம்** | **2023 (ரூபா)** | **2022 (ரூபா)** | **2021 (ரூபா)** | **2020 (ரூபா)** | **2019 (ரூபா)** |
|---|---|---|---|---|---|
| நிதி வருமானம் | 307,870 | 1,627,095 | 16,009,682 | 1,225,668 | 9,435,080 |
| நிர்வாக செலவினங்கள் | (5,962,278) | (7,753,562) | (9,411,210) | (6,540,697) | (9,931,740) |
| வரிக்கு பின்னரான தேறிய இலாபம்/(நட்டம்) | 3,814,462 | (4,299,299) | 5,008,966 | (4,076,470) | (255,178) |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

கணக்காய்வுக்கு கிடைத்த நிதி அறிக்கைகள் மற்றும் தகவல்களின் படி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான சில முக்கிய விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **விகிதங்கள்** | **2023 %** | **2022 %** | **2021 %** | **2020 %** | **2019 %** | **2018 %** |
|---|---|---|---|---|---|---|
| நிதி வருமான வளர்ச்சியின் /(குறைவின்) சதவீதம் | (81) | (90) | 1206 | 87 | (63) | (33) |
| நிர்வாக செலவின வளர்ச்சியின் /(குறைவின்) சதவீதம் | (23) | (18) | 44 | 34 | 14 | 11 |
| தேறிய இலாப வளர்ச்சியின் /(குறைவின்) சதவீதம் | 189 | (186) | (223) | 1498 | (101) | (89) |

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 கூட்டிணைந்த திட்டம்

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டினை உள்ளடக்கிய காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் முன்னோக்கிய ஏற்பாடு உறுதி செய்யப்பட்டால் மாத்திரமே இவ்வகையான திட்டமிடல் முன்னெடுப்புக்களை மேற்கொள்ள முடியும் என்று கம்பனியின் முகாமைத்துவம் கருதுகிறது. | அதன் தந்திரோபாய குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்காக கூட்டிணைந்த திட்டத்தினை தயாரித்து அமுல்படுத்த வேண்டும். |

**3.2 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் முன்னோக்கிய ஏற்பாடு உறுதி செய்யப்பட்டால் மாத்திரமே இவ்வகையான திட்டமிடல் முன்னெடுப்புக்களை மேற்கொள்ள முடியும் என்று கம்பனியின் முகாமைத்துவம் கருதுகிறது. | கம்பனி வருட ஆரம்பத்தில் செயல்நடவடிக்கை திட்டத்தினை தயாரித்து அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன் அதன் தந்திரோபாய குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்காக இதனை அமுல்படுத்த வேண்டும். |